بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 14/08/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# இறைவனுக்கு நன்றி செலுத்துவது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் செயல் முன்னுதாரணமும் அன்னாருடைய போதனையும்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாக்களில் இறைவனுக்கு நன்றி செலுத்துவது குறித்து பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளையும் அழகிய முன்மாதிரியையும் விவரித்திருந்தேன். நன்றி செலுத்துதலின் இந்த உயர் தரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரும் இக்காலகட்டத்தின் இமாமுமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டார்கள், அதைத் தன் நடைமுறையால் வீட்டில் குழந்தைகளுக்கு எவ்வாறு விளக்கினார்கள் என்பது தொடர்பான சில குறிப்புகளை இப்போது எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஞானத்தையும் விவரித்தவாறு கூறுகிறார்கள்:**

மனிதன் ஏதேனும் உயர்ந்த அந்தஸ்தைப் பெறும்போது (பெரும்பாலும்) அகந்தை கொள்கிறான்; ஆனால், அக்காலகட்டத்தில் அவனால் பல நன்மைகளை செய்ய முடியும். மேலும் மனிதகுலத்திற்குப் பயனளிக்கவும் முடியும். புனித குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: لَئِنۡ شَکَرۡتُمۡ لَاَزِیۡدَنَّکُمۡ அதாவது, ‘நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால், நான் உங்களுக்கு எனது அருள்களை மேலும் அதிகப்படுத்துவேன்; நீங்கள் நிராகரித்தால் நிச்சயம் எனது தண்டனையும் கடுமையானது.’

அதாவது, ஒரு மனிதனுக்கு இறைவனின் அருள்கள் கிடைக்கும்போது அவன் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். மேலும் மனிதகுலத்தின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். ஒருவேளை அவன் அவ்வாறு செய்யாமல் அதற்கு மாற்றமாக அநீதி இழைக்கத் தொடங்கினால், இறைவன் அவனிடமிருந்து அந்த அருட்கொடைகளைப் பறித்துக் கொள்கிறான்; மேலும் அவனுக்குத் தண்டனையை இறக்குகிறான்.

**பிறகு அன்னார் கூறுகிறார்கள்:** அனைத்திற்கும் மேலாக, நமக்கு உயிரையும் ஆரோக்கியத்தையும் அளித்த அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். அவன் நமக்கு அமைதியையும் மார்க்கத்தைப் பரப்புவதற்கான வழிகளையும் வழங்கியுள்ளான். உண்மையைச் சொல்வதானால், நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த விரும்பினாலும், அவனுடைய தயவையும் அருள்களையும் எண்ணி முடிப்பது ஒருபோதும் சாத்தியமில்லை.

**மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறுகிறார்கள்:** முஸ்லிம்கள் இறைவனுக்கு மிகவும் நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில், அவன் அவர்களுக்கு அறிவு மற்றும் நடைமுறை ரீதியாகவும் அனைத்து விதமான குழப்பங்கள், வெறுக்கத்தக்க விஷயங்கள் மற்றும் தீமைகளிலிருந்து தூய்மையான ஒரு மார்க்கத்தை வழங்கியுள்ளான். ஒரு மனிதன் சிந்தித்துப் பார்த்தால், அனைத்துப் புகழ்களுக்கும் குணங்களுக்கும் அல்லாஹ் மட்டுமே உரியவன்; வேறு எந்த மனிதனும் அல்லது படைப்பும் உண்மையான புகழுக்கு உரியது அல்ல என்பதை உணர்வான். மனிதன் எவ்வித சுயநலக் கலப்புமின்றிப் பார்த்தால் புகழுக்குரியவராகக் கருதப்படும் ஒருவர், எந்தவோர் இருப்பும் இல்லாதிருந்த, எந்தவோர் இருப்பைப் பற்றியும் அறியப்படாதிருந்த காலத்தில் அதனைப் படைத்தவர் என்பதாலோ அல்லது எந்தவோர் இருப்பும் இல்லாதிருந்த காலத்தில் இருப்பின் நிலைத்தன்மை, (அதன்) ஆரோக்கியம், வாழ்க்கையைத் தக்கவைத்தல் ஆகியவற்றிற்கு என்னென்ன காரணிகள் தேவை என்று தெரியாதிருந்த காலத்தில் அந்த அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் என்பதாலோ, அல்லது அவனுக்குப் பல துன்பங்கள் வந்திருக்கக்கூடிய காலத்தில் அவன் மீது இரக்கம் காட்டி அவனைப் பாதுகாத்தவர் என்பதாலோ அல்லது உழைப்பாளியின் உழைப்பை வீணாக்காமல் உழைப்பாளிகளின் உரிமைகளை முழுமையாக நிறைவேற்றுபவர் என்பதாலோதான் புகழுக்குத் தகுதியானவராக முடியும் என்பது அவனுக்குத் தெளிவாக வெளிப்படும். கூலி கொடுப்பது என்பது அவருக்கான உரிமைகளை வழங்குவதாக இருந்தாலும், உரிமைகளை முழுமையாக நிறைவேற்றும் நபரும் உபகாரி ஆக முடியும். இவை ஒருவரைப் புகழ் மற்றும் துதிக்குத் தகுதியானவராக மாற்றக்கூடிய உயரிய பண்புகளாகும். இப்போது யோசித்துப் பாருங்கள்! இந்த அனைத்து புகழ்களுக்கும் உண்மையான தகுதி படைத்தவன் அல்லாஹ்தான். அவன்தான் இந்த அனைத்து பூரண குணங்களையும் கொண்டிருக்கிறான். வேறு எவரிடமும் இக்குணங்கள் இல்லை.

பின்னர் **இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் அஹ்மதிய்யா இயக்கத்தின் நிலைநிறுத்தத்திற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதைச் சுட்டிக்காட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

அறிவு படைத்தவர்களே! இந்தத் தேவையின் நேரத்தில், இந்த அடர்ந்த இருளின் நாட்களில் அல்லாஹ் வானத்திலிருந்து ஓர் ஒளியை இறக்கி, இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்தும் பொருட்டும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியைப் பரப்பும் பொருட்டும், முஸ்லிம்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டும், அவர்களின் உட்புற நிலையைத் தூய்மைப்படுத்தும் நோக்கத்தோடும் பொதுநலனுக்காக ஓர் அடியானைத் தேர்ந்தெடுத்து உலகிற்கு அனுப்பினான் என்பதில் நீங்கள் ஆச்சரியப்படாதீர்கள். ஆச்சரியம் என்னவென்றால், இஸ்லாமிய மார்க்கத்தின் பாதுகாவலனாகிய, திருக்குர்ஆனின் போதனையை நான் எப்போதும் பாதுகாப்பேன், அதனைத் தளர்ந்துபோகவோ, பொலிவிழக்கவோ, ஒளியிழக்கவோ விடமாட்டேன் என்று வாக்குறுதியளித்த அல்லாஹ், இந்த இருளைப் பார்த்த பிறகும், இந்த உட்புற மற்றும் வெளிப்புறக் குழப்பங்களைப் பார்த்த பிறகும் அமைதியாக இருந்திருப்பான் என்றோ, தனது தூய வேதத்தில் உறுதியாகக் குறிப்பிட்ட அந்த வாக்குறுதியை நினைவுகூராமல் இருந்திருப்பான் என்றோ கருத்துவதுதான் (ஆச்சரியம்) ஆகும்! மீண்டும் நான் கூறுகிறேன்; ஆச்சரியப்பட வேண்டிய இடம் ஏதேனும் இருந்திருந்தால் அது, ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் அல்லாஹ் தனது மார்க்கத்தைப் புதுப்பிக்கும் ஓர் அடியாரை உருவாக்கிக்கொண்டே இருப்பான் என்று முன்னறிவித்த

அந்த தூய தூதர் (ஸல்) அவர்களின் இந்தத் தெளிவான வெளிப்படையான கூற்று பொய்யாய்ப் போயிருந்தால் மட்டுமே..... எனவே, இது ஆச்சரியத்திற்குரிய விஷயம் அல்ல; மாறாக, ஆயிரக்கணக்கான நன்றிகளுக்கும் நம்பிக்கையை வளர்ப்பதற்குமான நேரமாகும். ஏனென்றால், அல்லாஹ் தனது அருளினாலும் கருணையினாலும் தனது வாக்குறுதியை நிறைவேற்றி, தனது தூதரின் முன்னறிவிப்பில் ஒரு நிமிட வித்தியாசமும் ஏற்பட விடவில்லை. அவன் ஒரு முன்னறிவிப்பை மட்டும் நிறைவேற்றவில்லை; மாறாக, எதிர்காலத்திற்காக ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் மற்றும் அற்புதங்களின் கதவுகளையும் திறந்து வைத்துள்ளான்.

நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால் நன்றி செலுத்துங்கள்; நன்றியுடன் சஜ்தா செய்யுங்கள். ஏனெனில், நம் முன்னோர்களும் எண்ணற்ற ஆன்மாக்களும் எந்தக் காலத்தை சந்திக்க விரும்பினார்களோ, எந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்தார்களோ அதனை நீங்கள் பெற்றுவிட்டீர்கள். இப்போது அதனை மதிப்பதும் மதிக்காமல் இருப்பதும், அதனால் பயனடைவதும் அடையாமல் இருப்பதும் உங்கள் கைகளில்தான் உள்ளது."

இன்றைய முஸ்லிம்களின் கடமை என்னவென்றால், அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாகி, அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக்கொண்டு, தங்களை ஒற்றுமை என்னும் சரடில் பிணைத்துக் கொள்ள வேண்டும்; இதன் மூலம் அவர்கள் சிரமங்களிலிருந்து தப்பிக்க முடியும்.

**உண்மையைத் தேடும் ஒருவரை நோக்கி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதாவது:** "சரியான நேரத்தில் அல்லாஹ் உதவி செய்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள். மேலும் அவன் இந்த இயக்கத்தை நிலைநிறுத்தினான். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த அருளை வீணடிக்காமல், மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நோக்கி, இதன் உதவியையும் ஆதரவையும் மதிப்பதே உங்களுக்குப் பொருத்தமானது."

அல்லாஹ்வின் அருள் என்னவென்றால், அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை மக்கள் அடையாளம் கண்டுகொள்கிறார்கள். எனவே, இது உங்கள் மீது அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணையாகும்; ஏனெனில் அவன் உங்களுக்கு இந்த ஆற்றலையும் அடையாளம் காணும் பார்வையையும் வழங்கியுள்ளான்.

பின்னர் அன்னார் மியா(ன்) அப்துல் ஹக் சாஹிபின் உதாரணத்தைக் கூறி, அல்லாஹ் அவருக்கு எவ்வாறு உதவி செய்து ஆடம்பர வாழ்க்கையிலிருந்து வெளியேற்றி, உண்மையை ஏற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பை வழங்கினான் என்று எடுத்துரைத்தார்கள். மியா(ன்) அப்துல் ஹக் சாஹிப் கஸூரைச் சேர்ந்தவர். அவர் ஒரு மாணவராக இருந்தார். கிறிஸ்தவராக ஆகி இருந்தார். பின்னர் ஹஸ்ரத் சாஹிபின் சில நூல்களைப் படித்த பிறகு அன்னாருக்கு கடிதம் எழுதி, இஸ்லாத்தின் உண்மையை நடைமுறையில் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். குறைந்தது இரண்டு மாதங்களாவது காதியானுக்கு வந்து தங்குங்கள் என்று அன்னார் கூறினார்கள். அதன்படி அவர் வரத் தீர்மானித்தார். பலரும் அவரைத் தடுத்து, காதியானுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினர். ஒருவர் அவரைத் திட்டவும் செய்தார். ஆனால் இவை அனைத்தையும் மீறி அல்லாஹ்வின் அருள் மேலோங்கியது; அது அவரை இங்கு இழுத்து வந்தது.

**அஹ்மதிய்யா இயக்கத்தில் இணைபவர்களைப் பற்றியும் அவர்களின் நன்னடத்தை மற்றும் அன்பைப் பற்றியும் குறிப்பிடுகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“அல்லாஹ்வின் அருளினாலும் கருணையினாலும் அவன் என்னை தனியாக விட்டுவிடவில்லை என்பதற்கு நான் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. என்னுடன் சகோதரத்துவப் பிணைப்பைக் கொண்டு இந்த இயக்கத்தில் இணைபவர்களை அல்லாஹ் தன் சொந்தக் கரங்களால் நிலைநிறுத்தியுள்ளான். அவர்களின் அன்பு மற்றும் தூய்மை மிகவும் விசித்திரமானதும் அழகானதுமாகும். இது எனது முயற்சியால் ஏற்பட்டது அல்ல; மாறாக, அல்லாஹ் தனது சிறப்பான அருளால் உண்மையால் நிரம்பியுள்ள ஆன்மாக்களை எனக்கு வழங்கியுள்ளான்...... எல்லாவற்றிற்கும் மேலாக, எனது ஆன்மிகச் சகோதரர் ஒருவரைப் பற்றி நினைவுகூர என் உள்ளத்தில் பேரார்வம் எழுகிறது. அவரது பெயர் அவரது உளத்தூய்மையின் ஒளியைப் போன்றே நூருத்தீன் (அதாவது, மார்க்கத்தின் ஒளி) ஆகும். இஸ்லாமிய மார்க்கத்தின் கலிமாவை உயர்த்துவதற்காக தமது ஹலாலான செல்வத்தைச் செலவழித்து அவர் செய்துவரும் சில மார்க்கத் தொண்டுகளை நான் எப்போதும் ஏக்கத்தோடு பார்க்கிறேன்; அந்தத் தொண்டுகளை நானும் ஆற்றியிருக்கக் கூடாதா (என்று விரும்புகிறேன்).

அகிலங்களின் இரட்சகனே! உனது அருட்கொடைகளுக்கு என்னால் (முழுமையாக) நன்றி செலுத்த முடியாது. நீ மிகவும் இரக்கமுடையவனும் கருணையாளனுமாவாய். உனது அளப்பரிய அருள்கள் என் மீது உள்ளன. என் பாவங்களை மன்னிப்பாயாக; நான் அழிந்துவிடக் கூடாது. என் உள்ளத்தில் உனது சிறப்பு அன்பைச் செலுத்தி, எனக்கு அமைதியான வாழ்வை அளிப்பாயாக; என் தவறுகளை மறைப்பாயாக; எந்தச் செயல்கள் உனக்கு திருப்தியானவையோ அவைகளை என்னிடமிருந்து வெளிப்படுத்துவாயாக. உனது பெருந்தன்மையான முகத்தின் வாயிலாக உன்னிடம் வேண்டுகிறேன்; உனது கோபத்திலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன். (என் இறைவனே!) என் மீது இரக்கம் காட்டுவாயாக; இம்மை மற்றும் மறுமையின் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் என்னைக் காத்தருள்வாயாக. ஏனெனில் அனைத்து அருள்களும் கருணையும் உனது கரங்களிலேயே உள்ளன. ஆமீன், சும்ம ஆமீன்!”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “இந்த இடத்தில் இறைவனுக்கு நன்றி செலுத்துவதை என்னால் செய்யாமல் இருக்க முடியவில்லை; அல்லாஹ் தனது நபி (ஸல்) அவர்களுக்கு ஆதரவாகத் தனது வஹீ மூலம் நிராகரிப்பாளர்களைக் குற்றவாளிகளாக்கி, ‘என் நபி மிக உயர்ந்த நற்பண்புகளைக் கொண்டவர்; அவருடைய கடந்த நாற்பது ஆண்டு கால வாழ்க்கையில் நீங்கள் எந்தக் குறையையோ குற்றத்தையோ உங்களால் சுட்டிக்காட்ட முடியாது. அவர் நாற்பது ஆண்டுகள் இரவும் பகலும் உங்களுக்கு இடையிலேயே இருந்திருக்கிறார் என்பதும், நன்மதிப்பு, தூய்மை, தலைமை மற்றும் கண்ணியம் நிறைந்த அவருடைய உயரிய குடும்பத்தின் மீது ஒரு சிறு குறையைக்கூட சுமத்துவதற்கு உங்களுக்குச் சக்தியில்லை’ என்று கூறியுள்ளான். (அது போலவே எனக்கும் உதவி செய்துள்ளான் என்பதற்காக அந்த நன்றியைச் செலுத்துவதிலிருந்து என்னால் விலகி இருக்க முடியாது.)

எனவே யோசித்துப் பாருங்கள்: உங்கள் கண்முன்னே நாற்பது ஆண்டுகளைக் கழித்த, மிக உயர்ந்த, தூய்மையான மற்றும் நேர்மையான குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரைப் பற்றி உங்கள் மனசாட்சியே சாட்சி அளிக்கும்போது, அவதூறு பேசுவதும் பொய் சொல்வதும் அவரது வேலையல்ல என்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்த நற்குணங்களோடு வானத்தின் அடையாளங்களும் இறைவனின் அற்புதங்களும் ஆதரவுகளும் அவருக்கு அருளப்பட்டுக் கொண்டிருக்கும்போது, உங்கள் வழிகேடு, அறியாமை மற்றும் இணைவைப்பு நிறைந்த கொள்கைகளுக்கு எதிராக அவர் கொண்டு

வந்த போதனைகளை நீங்கள் எப்படி எதிர்க்க முடியும்? இத்தனைக்குப் பிறகும் அந்த நபியின் உண்மையைப் பற்றி யாருக்குத்தான் சந்தேகம் இருக்க முடியும்?

இவ்வாறே, அல்லாஹ் என் எதிரிகளையும் பொய்ப்பிப்பவர்களையும் குற்றவாளிகளாக்கியுள்ளான். பராஹீனே அஹ்மதிய்யாவின் 512 ஆம் பக்கத்தில் எனக்கு அருளப்பட்ட வஹீ பிரசுரிக்கப்பட்டதிலிருந்து இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வஹீ என்னவென்றால், وَلَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ اَفَلَا تَعْقِلُوْنَ அதாவது, நான் இதற்கு முன்பும் நாற்பது ஆண்டுகள் உங்களுடன் வாழ்ந்துள்ளேன்; நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? நீங்கள் நீண்ட காலமாக என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; எனது பணி அவதூறோ பொய்யோ அல்ல. அல்லாஹ் என்னை அனைத்து அசுத்தமான வாழ்க்கையிலிருந்தும் பாதுகாத்துள்ளான்."

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வீட்டிலும் குழந்தைகளுக்கு நன்றி உணர்வை வளர்க்க முயற்சிப்பார்கள். ஓர் அறிவிப்பு வருகின்றது: ஒருமுறை அன்னார் குழந்தைகளுக்கு ஒரு கதையைக் கூறினார்கள்.** அல்லாஹ் ஒரு வானவரை வழுக்கைத் தலையுடையவனிடமும் ஒரு பார்வையற்றவனிடமும் அனுப்பினான். அந்த வானவர் வழுக்கைத் தலையுடையவனிடம் சென்று, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அவன், எனக்கு அழகான முடியும் செல்வமும் வேண்டும் என்றான். வானவர் அவன் தலையை தடவவே, அவனுக்கு முடி வளர்ந்தது; செல்வமும் கிடைத்தது. பிறகு பார்வையற்றவனிடம் சென்று கேட்டார். அவன், எனக்குக் பார்வையும் செல்வமும் வேண்டும் என்றான். வானவர் அவனது தலையை தடவியதும் அவனுக்குப் பார்வை திரும்பிக் கிடைத்தது; செல்வமும் கிடைத்தது.

சில காலத்திற்குப் பிறகு, அவர்களை சோதிப்பதற்காக அல்லாஹ் அந்த வானவரை மீண்டும் ஓர் ஏழையின் வடிவில் அவர்களிடம் அனுப்பினான். வானவர் வழுக்கை தலையுடையவனிடம் சென்று உதவி கேட்டபோது, அவன் கோபப்பட்டு தீய இயல்புடன் பதில் அளித்தான். மேலும் அவரை விரட்டியவாறு உன்னைப் போன்று பல யாசகர்கள் சுற்றி அலைகிறார்கள் என்று கூறினான். வானவர் அவனது தலையைத் தடவியதும், அவன் மீண்டும் பழையபடி வழுக்கைத் தலையுடையவனாக மாறினான்; அவனது செல்வம் செல்ல தொடங்கியது.

பிறகு பார்வையற்றவனிடம் சென்று கேட்டபோது, அவன், அல்லாஹ் எனக்கு இதையெல்லாம் தந்தான். உனக்கு தேவையானதை எடுத்துக்கொள் என்றான். அல்லாஹ் அவனது செல்வத்தைப் பெருக்கி அவனுக்கு அருள் புரிந்தான். எனவே அன்பான குழந்தைகளே! அல்லாஹ்வின் அருள்களுக்கு எப்போதும் நன்றி செலுத்துங்கள்; அதை மதியுங்கள். யாசிப்பவர்களை விரட்டாதீர்கள். தர்மம் செய்வதும் ஏழைகளுக்கு உதவுவதும் மிகச் சிறந்த காரியங்கள்; அது அல்லாஹ்வை மகிழ்ச்சிப்படுத்தி அருள்களை அதிகரிக்கும் என்று கூறினார்கள்.

**மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் அவர்களைப் பற்றி அன்னார் கூறினார்கள்:**

"ஹஸ்ரத் ஹக்கீம் மௌலவி ஸாஹிப் அல்லாஹ்வின் அருள்களில் ஒரு மிகப்பெரிய அருள் ஆவார். அவர் மூலமாக பல ஏழைகளுக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்கிறது."

சிகிச்சை என்னவோ மற்றவர்களுக்குத்தான் அளிக்கப்பட்டது. ஆனால் மனிதகுலத்திற்குச் சேவை செய்து மனிதர்களுக்குப் பயனளித்து வருகிறார்கள் என்பதற்காக அன்னார் அதற்கு நன்றி கூறிக் கொண்டிருந்தார்கள்.

*ஜுமுஆ குத்பாவின் இறுதியில், ஹுஸூர் அவர்கள் சில மர்ஹூம்களைப் பற்றி குறிப்பிட்டார்கள்.*

*மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் ஷஹ்பாஸ் அஹ்மது ஸாஹிப் (முரப்பி - ஐவரி கோஸ்ட்)*

*மதிப்பிற்குரிய யலிங்கானா மோம்னி ஸாஹிப் (புர்கினா ஃபாசோ ஷஹீத்)*

*மதிப்பிற்குரிய யஹ்யா சுமாரே ஸாஹிப் (மாலி ஷஹீத்)*

*மதிப்பிற்குரிய சிராஜுல் ஹக் குறைஷி ஸாஹிப் (நாயிப் ஆபிசர் ஜல்சா சாலானா ரப்வா)*

*மதிப்பிற்குரிய லாவால் தய்யுப் ஸாஹிப் (முஅல்லிம் - நைஜீரியா)*

*மதிப்பிற்குரிய மாஸ்டர் கஃபூர் அஹ்மது ஸாஹிப் (சங்க்லா ஹில் - கனடா) ஆகியோரது நற்குறிப்புகளை எடுத்துரைத்து அவர்களுக்காக மன்னிப்பையும் வேண்டி துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)